செ.வெ.எண்: 70 நாள்:25.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**அலவாய்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், அலவாய்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.08.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசு செப்டம்பர் 1ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படுவதாக அறிவித்ததை தொடர்ந்து பள்ளிகள் திறப்பதற்கு தேவையான வழிகாட்டு நெறிமுறைகளான மாணவ, மாணவியர்கள் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளி விட்டு வகுப்பறையில் உட்கார வைக்க வேண்டுமெனவும், பள்ளி வகுப்பறையில் கிருமி நாசினி வைக்க வேண்டும். மேலும் 50 சதவிகித மாணவ, மாணவியர்கள் சுழற்சி முறையில் பள்ளிக்கு வர வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இன்று நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அலவாய்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் முகக்கவசம், கிருமி நசினி, பல்ஸ் ஆக்ஸி மீட்டர், உடல் வெப்பநிலை பரிசோதனை கருவிகள் ஆகியவை போதுமான அளவில் இருப்பில் உள்ளனவா என தலைமை ஆசிரியரிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

பின்னர் பள்ளி வளாகம், கழிப்பறைகள், வகுப்பறைகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் தூய்மைகள் குறித்தும், மேலும் ஆசிரியர்கள் வருகை பதிவேடு, பள்ளி மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை, பள்ளி செல்ல குழந்தைகள் கணக்கெடுப்பு, ஆசிரியர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்ட விவரம் ஆகியவற்றை தலைமை ஆசிரியரிடம் கேட்டறிந்தார்.

மேலும், தமிழக அரசு அறிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளை சரியாக பின்பற்ற வேண்டுமெனவும், பள்ளிகளில் இதுவரை கொரோனா தடுப்பூசி போடாத ஆசிரியர்கள் பள்ளி துவங்குவதற்கு முன்பு தடுப்பூசிகளை போட்டுகொண்டு தங்களையும், பள்ளிக்கு வருகை தரும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டுமெனவும் தலைமை ஆசிரியருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறித்தினார்.

இந்த ஆய்வின் போது வெண்ணந்தூர் தலைமை ஆசிரியர் திருமதி.து.பேபி லதா, உதவி தலைமை ஆசிரியர் திருமதி.சாந்தி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலவலகம், நாமக்கல் மாவட்டம்.